மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, நிர்ணயிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு வழங்கப்படுகிற குடிதண்ணீரை எடுத்து புதிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க முடியாது. திட்டத்தில் இணைக்கப்படாத குடியிருப்புகளுக்கு அந்தப் பகுதியின் நிலத்தடி நீரைப் பயன்படுத்தியோ, வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்தோதான் தண்ணீர் வழங்க வேண்டியிருக்கும். ஆய்வு செய்து, வாய்ப்பில்லாத குடியிருப்புப் பகுதிகளுக்கு வேறு திட்டத்தின் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

33—

அங்கன்வாடி மையம்

*__10122__—__திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:__

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சுங்குடி வருதம்பட்டி கிராமத்திலுள்ள குறு அங்கன்வாடி மையத்தை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி சுங்குடி வருதம்பட்டி கிராமத்தில் பிப்ரவரி 2010 முதல் குறு அங்கன்வாடி மையம்

செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 400 முதல் 800 வரை மக்கள்தொகை உள்ள இடங்களில் முதன்மை அங்கன்வாடி மையங்களைச் செயல்படுத்த வேண்டும். அதனடிப்படையில் தற்போது 692 மக்கள்தொகைதான் அந்தக் கிராமத்தில் இருக்கின்ற காரணத்தினால், இப்போது குறு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சங்கரி தொகுதி சுங்குடி வருதம்பட்டி குறு அங்கன்வாடி மையத்தை, முதன்மை மையமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, சுங்குடி வருதம்பட்டி கிராமத்தில் உள்ள குறு அங்கன்வாடி மையத்தினை முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். அதற்காக தாயுள்ளம் கொண்ட தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாக இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே தமிழகத்தில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன, மேலும் புதியதாக எத்தனை அங்கன்வாடி மையங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலமாக மொத்தம் 49,499 குழந்தைகள் மையங்களும், 4,940 குறு மையங்களும், ஆக மொத்தம் 54,439 மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. புதியதாக

1,103 அங்கன்வாடி மையங்கள் தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் முல்லைவனம் கிராமத்தில் ஏறக்குறைய 50 குழந்தைகள் உள்ளனர். ஆனால் மக்கள்தொகை அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல 70 குடும்பங்களே உள்ள ஒரு கிராமம். குழந்தைகள் அங்கன்வாடிக்குச் செல்ல வேண்டுமென்றால், 2 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, குழந்தைகளுடைய எண்ணிக்கையையும் தூரத்தையும் கணக்கில் எடுத்து முல்லைவனம், கருத்தம்பட்டி போன்ற பல கிராமங்களில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், அந்தக் கிராமத்திலேயே அங்கன்வாடி மையம் வேண்டுமென்று சொன்னால், குறு அங்கன்வாடி மையமாகத்தான் செயல்படுத்த முடியும். பெரிய அங்கன்வாடி மையமாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், 2 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய பெரிய கிராமத்தைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். ஆகவே, குழந்தைகள் வந்து செல்வதற்கு வசதி இல்லாத சூழ்நிலையிலே இருக்கக்கூடிய அது மாதிரியான கிராமப் பகுதிகளைக் குறித்துக் கொடுப்பார்களேயானால், மாவட்ட ஆட்சியரின் அதிகார வரம்புக்குள்ளேயே*

2013 பிப்ரவரி 8]

இருக்கும்பட்சத்தில் அங்கன்வாடி மையங்களை அமைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட 104-வது வட்டத்தில், நேரு பார்க் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் கட்டி முடிக்கப்பட்டு, பூட்டியிருக்கும் அங்கன்வாடி மையத்தினைத் திறந்து செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மையம் எப்போது கட்டப்பட்டது என்பது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. இருந்தாலும், மிக விரைவில் அது திறக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட தோபாடி கிராமத்திலே அங்கன்வாடிக் கட்டடம் கட்டப்பட்டு 6 மாதங்களாகின்றன. அதைத் திறப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்படாமல் இருக்குமேயானால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தி, திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.